1975 மார்ச் 25]

ஆராய்ந்து பல்கலைக் கழகம் ஒப்புக்கொள்ளுமேயானால், கலைக் கல்லூரிகள் தன்மைக்கு வைக்கலாம். அது வேறு, இது வேருக இருப்பதால்தான், தனித்தனியாக வைத்து நடத்தவேண்டியிருக்கிறது.

திரு செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழ் பட்டப்படிப்புக்கு பி. லிட்., என்ற ஆங்கிலப் பெயர் வைக்கத்தான் ஒப்புக்கொண்டிருக்கிறதா? தமிழிலேயே பட்டப் பெயர் கொடுப்பதற்கு ஆலோசனை இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, தமிழாசிரியர்கள் ஓரிரு பரீட்சைகள் எழுதினால், யார் யார் தேறுகிறார்களோ அவர்கள் பி. லிட்., பட்டத்திற்கு உரியவர்கள் ஆக்கப்படலாம். பத்தாம் வகுப்பு படித்து வித்துவான் படித்தவர்களுக்கெல்லாம் பி. லிட்., கொடுத்துவிடமாட்டார்கள். அதனுடைய முழு விவரக் குறிப்பும் பல்கலைக் கழகத்திலிருந்து கிடைக்கவில்லை. நீண்ட நாட்களாக ஆராய்ந்து அண்மையிலேதான் முடிவெடுத்திருக்கிறார்கள். முழு விவரக் குறிப்பும் வந்த பிறகு, ஓரிரு தேர்வு எழுதவேண்டியிருக்கும். தேர்வு எழுதி தகுதி பெற்றால் பி. லிட். பட்டம் கிடைக்கும்.

திரு செ. முத்துசாமி: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் உள்ள பல்கலைக் கழகங்களிலே தமிழர்கள் தான் அத்தனை பேரும் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அப்படியிருக்கும்போது நடுவண் அரசு ஆங்கிலத்திலே தான் பட்டம் கொடுக்க வேண்டும் என்று சொல்லியிருக்கிறதா? அப்படி ஏதாவது குறிப்புகள் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இதைப் பல்கலைக் கழகம் தான் முடிவு செய்ய வேண்டும். நடுவண் அரசுத்தன்மைகள் ஒன்றும் இல்லை. மாண்புமிகு மேலவைத் துணைத் தலைவர் அவர்களே பல்கலைக் கழகத்தின் ஆட்சிக் குழுவில் பல தடவை விவாதித்து இந்த நிலைமைக்குக் கொண்டுவந்து சேர்த்திருக்கிறார்கள். ஆகவே பல்கலைக் கழகத்திற்கு உட்பட்டு பட்டமாக்கப்படுவதன் மூலம் அவர்களெல்லாம் எதிர்காலத்திலே ஆசிரியர்களாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படும் என்ற கருத்திலேதான் இந்தப் பட்டம் ஏற்படும் என்ற நிலைமை வந்து, ஓரளவுக்கு சென்னைப் பல்கலைக் கழகம் ஒப்புதல் அளித்திருக்கிறது. மதுரைப் பல்கலைக் கழகமும் அதைக் கடைப்பிடிக்குமானால், தமிழாசிரியர்களின் பெருங்குறை நீங்கும். இதை அந்தப் பல்கலைக் கழகத்திலே இருப்பவர்கள் ஆராய்ந்து ஒரு முடிவை எடுப்பார்கள்.

Post of the Director of State Institute of Education

* 184. *Q.*—Thiru K. S. GANAPATHI: Will the Hon. the Minister for Education be pleased to state —

(*a*) whether the post of the Director of State Institute of Education in the Directorate of School Education has not been filled up for months; and

(*b*) if so, the reason therefor?

மாநிலக் கல்வி நிறுவன இயக்குநர் பதவி

திரு கே. எஸ். கணபதி : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநிலக் கல்வி நிறுவன இயக்குநர் பதவி மாதக்கணக்கில் நிரப்பப்படாமலுள்ளதா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணம் யாது ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) இப்பதவியில் முன்பு பணியாற்றி வந்த அலுவலர் நவம்பர் 1974-ல் பயிற்சிக் கல்லூரியின் முதல்வராக மாற்றப்பட்டார். அது முதலாக பள்ளிக் கல்வி இணை இயக்குநர் (ஆரம்பக் கல்வி) மேற்கண்ட பதவியில் கூடுதல் பொறுப்பில் (additional charge) அமர்த்தப்பட்டார். 21-2-1975 முதல் அரசு தேர்வு இயக்குநரே இவ்வேலையையும் பார்த்துக் கொள்ளுவது என்ற ஏற்பாடு ஏற்கப்பட்டுள்ளது.

(பிற்பகல் 4.10)

திரு கே. எஸ். கணபதி : தலைவர் அவர்களே, இப்போதுள்ள இயக்குநர் அவர்களுக்கு மூன்று பிரிவுகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையிலே அவருக்குத் துணையாக இருக்க துணை இயக்குநர்கள் அல்லது இணை இயக்குநர்கள் நியமிக்கப் படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது அரசின் பரிசீலனையில் தனியாக இருந்து வருகிறது. இப்போது மூன்று பிரிவுகளாக இருக்கின்றன, 'எவால்யுவேஷன், இன்ஸ்டிட்யூட்ஸ் மேலும் எக்ஸாமினேஷன்' என்று அவருக்கு மூன்று பிரிவுகள் ஒப்படைக்கப் பட்டிருக்கின்றன. அவரும் இதிலே தமக்குத் துணையாக ஒருவர் இருக்க வேண்டும் என்று கோரியிருக்கிறார்கள். ஏற்கெனவே ஒரு பதவி இருந்து அது நிரப்பப்படாமல் இருப்பதன் காரணமாக இப்போது அது அரசின் ஆய்விற்கு வந்திருக்கின்றது. அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது கல்வித் துறையில் பல்வேறு பிரிவுகளுக்கு என்று மூன்று இயக்குநர்கள் இருக்கிறார்கள். தொடக்கப் பள்ளி இன்று பெரிய அளவில் வளர்ந்திருக்கின்றது. எனவே தொடக்கப் பள்ளிக்கு என தனியாக ஒரு இயக்குநரை ஏற்படுத்துவதற்கான ஆலோசனை அரசிடம் இருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இது பற்றிப் பல முறை சொல்லியிருக்கிறேன். தொடக்கப் பள்ளிகளுக்கென ஒரு தனி இயக்குநரை நியமிப்பதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. இப்போது தொடக்கப் பள்ளி என்பது உயர்நிலைக் கல்வியோடு இணைந்திருக்கின்றது. இதிலே ஒவ்வொரு மாவட்டக் கல்வி அதிகாரியும் முதன்மைக் கல்வி அதிகாரியும் இணைந்து பார்க்க வேண்டிய நிலை இப்போது இருந்து

1975 மார்ச் 25

வருகிறது. அந்த நிலையிலே இந்த இரண்டையும் ஒரே இயக்குநர் பார்க்க வேண்டிய அவசியம் இருக்கின்றது. இப்போதுள்ள இரண்டு இணை இயக்குநர்களில் ஒருவர் துவக்கக் கல்விப் பிரிவினைப் பார்க்க வேண்டும் என்றும் ஒருவர் உயர்நிலை கல்வி பிரிவினைப் பார்க்க வேண்டும் என்றும் இணைப்பு ஏற்படத்தக்க விதத்தில் இயக்குநர் பார்க்க வேண்டும் என்ற முறையினை இப்போது ஏற்படுத்தியிருக்கிறோம்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, இப்போது கூட பயிற்சியளிக்கும் உயர் நிலைப் பள்ளிகளிலே, பயிற்சிப் பள்ளிகளிலே, ஒன்றும் வகுப்பு முதல் பதினோரும் வகுப்பு வரையில் இருக்கின்றன. அங்கே ஒன்றும் வகுப்பில் பாடம் சொல்லிக்கொடுக்கும் ஆசிரியரும் செகண்டரி கிரேடு ஆசிரியர் தான். அப்படியிருக்கும்போது செகண்டரி கிரேடு எஜுகேஷன் கீழே வரும் பள்ளிகளை செகண்டரி எஜுகேஷன் டைரெக்டர் கவனிப்பதற்கும் தொடக்கப் பள்ளியினை தொடக்கப்பள்ளி டைரெக்டர் கவனிப்பதற்கும் ஏற்றவாறு ஏற்பாடு செய்வதில் சிரமம் இருக்க முடியாது. இதை அரசு அறியுமா, அறிந்து அதுபற்றி ஆராயுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இதற்காக அதாவது தொடக்கப் பள்ளிகளுக்கு என ஒரு தனி இயக்குநரைப் போடுவதனால், என்னென்ன அனுகூலங்கள் ஏற்படும் ஆசிரியர்களைப் பொறுத்த மட்டில், என்று அவர்கள் நினைக்கின்றார்களோ அவற்றை ஒருவரே இருந்து பார்ப்பதாலும் பெறக்கூடும் என்று அரசு கருதுகின்றது.

Unauthorised use of the Cauvery Water for Irrigation

*185 Q.—THIRU Y. VENKATESWARA DIKSHIDAR (on behalf of THIRU M. K. D. NATARAJAN) : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether the Government are aware of the fact that some people pump the Cauvery waters for irrigation unauthorisedly; and

(*b*) if so, the action taken by the Government to prevent it?

பாசனத்திற்கு காவிரி நீரை அனுமதியின்றி உபயோகப்படுத்தல் —

(திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்) (திரு மு. க. து. நடராசன் சார்பில்) : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அரசு அனுமதியின்றி, காவிரி நீரை விசை ஏற்றம் மூலம் இறைத்து சிலர் பாசனம் செய்வதை அரசு அறியுமா?